13th September 1958]

As no cases of lease of vacant sites or rack-renting or of forceful and hasty evictions were brought to the notice of the Government, the Government considered it not necessary to extend the Act to Tiruvarur and Mannargudi Municipalities.

SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் அமைச்சர் அவர்கள் திருவாரூர் மன்னார்குடி முனிசிபாலிட்டிகளிலிருந்து மனுக்கள் வந்து, அவசியமில்லை என்று சொன்னது சரியா ? இனிமேலாவது "ஸிடி டெனன்ட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்ட்"-ஐ எல்லா முனிசிபாலிட்டிகளிலும் அமுல் நடத்த வேண்டிய வேலைகளைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : நான் சொன்ன அளவிலே சரிதான். ஏனென்றால், அங்கு இம்மாதிரியாக பலாத்காரமாக வெளியேற்றுவது பற்றிய ரிப்போர்ட் அரசாங்கத்திற்கு வரவில்லை.

SRI M. C. MUTHUKUMARASWAMY : அமைச்சர் அவர்கள் சொல்லிய நகரங்களில் இருந்து இதுவரையில் எத்தனை மனுக்கள் அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது ? திருவாரூர் சம்பந்தப்பட்ட வரையில் மனுக்கள் வந்த பிறகு இன்னும் ஏன் கவனிக்கவில்லை என்பதற்கு ஏதாவது காரணம் சொல்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தச் சட்டத்தின் கருத்து முக்கியமாக சென்னைக்கும், பிற்பாடு, மதுரை போன்ற பெரிய நகரங்களுக்கும் விஸ்தரிக்கவேண்டுமென்பது. ஆனால், மற்ற இடங்களில் இம்மாதிரியான சூழ்நிலை ஏற்பட்டால், பெரிய நகரங்களுக்கும் விஸ்தரிக்கப்படலாம். அந்த வகையில் இந்த ஊர்களுக்கு அவசியமில்லை என்ற தகவல் கிடைத்ததால், இது விஸ்தரிக்கப்படவில்லை.

SRI T. S. RAMASWAMY PILLAI : When do the Government propose to extend the provisions of this Act to the Kanyakumari District ?

THE HON. SRI M. A. MANICKAVELU : I believe the Act will cover that area also. If the situation warrants, it can also be extended to that area.

Christian Religious Institutions.

*228 *Q.*—SRI P. G. MANICKAM : உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) கிறிஸ்தவ மத ஸ்தாபனங்களையும், அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தின் வரம்புக்குள் கொண்டு வரும் பிரச்னை சென்னை அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்து வருகிறதா ?

(ஆ) அவ்வாறு ஆலோசனையிலிருப்பின் அவைகளின் மீது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

SRI P. G. MANICKAM : இது சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுப்பதற்கான ஆலோசனைகளை பக்கத்து ராஜ்ய சர்க்கார் நம் சர்க்காரைக் கேட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படி ஒன்றும் என்னிடம் தகவல் இல்லை.

[13th September 1958

SRI D. S. AUTHIMOOLAM : ஸார், இந்த சென்னை ராஜ்யத்தில், கிறிஸ்தவ மிஷனரிகள் சொத்துக்களை வைத்துக் கொண்டு பரிபாலிப்பதில் ஊழல்கள் இருப்பதாகத் தெரிகிறது. இந்து மத சொத்துக்களை பரிபாலிப்பதைக் கைக்கொண்ட சர்க்கார் இவைகள் விஷயத்தில் என்ன விதமான அபிப்பிராயம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் ? அதற்காக அவர்கள் செய்யக்கூடிய யோசனைகள் என்ன என்பதை அறியலாமா ?

MR. SPEAKER : The question is out of order. It contains an insinuation.

SRI V. K. KOTHANDARAMAN : முஸ்லிம் மத ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அவைகளையும் இந்த அற நிலையப் பாதுகாப்பு போர்டின் கீழ் கொண்டு வர முயற்சிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் குறிப்பிடும் சட்டம் ஹிந்து அற நிலையப் பாதுகாப்புச் சட்டம். முஸ்லிம் ஸ்தாபனங்கள் விஷயத்தில் "வாக்ப் சட்டம்" மத்திய பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அது இங்கேயும் அமுலில் இருக்கிறது. அந்த சட்டத்தின் கீழ் ஒரு வாக்ப் போர்டும் அமைக்கப்பட்டிருக்கிறது.

MR. SPEAKER : Next question.

SRI T. S. RAMASWAMY PILLAI : The question may be taken up tomorrow, Sir.

MR. SPEAKER : I want to make my position clear. I have received answers for over a thousand questions and we have just fifteen days more. Therefore I am allotting at the rate of about fifty questions a day. If hon. Members want to put more supplementaries, then it means that many questions will have to be dropped. When the House is prorogued, these questions lapse. But if the House agrees, I have no objection to extend the question time by 5 or 10 minutes provided hon. Members co-operate and do not put too many supplementaries.

SRI K. VINAYAKAM : On a point of information, Sir. Your predecesors who illustriously occupied the Chair were generous enough to the House by extending the question-hour beyond the scheduled period of one hour. I may quote the instance of the previous Speaker, Sri J. Sivashanmugam Pillai, who extended the question hour to two hours. He was so accommodative to us. He gave us lot of chance to put more questions. (Interruption.) I do not mean to say that you are unkind to us. You are following the rules strictly to protect your position. (A Member : This is more or less expressing no confidence in the Speaker). At the same time it lies in your discretionary powers. (Interruption.)

MR. SPEAKER : I will answer him.

SRI K. VINAYAKAM : I am only using proper parliamentary language. I appeal to you to be more generous, to be kind to us, to be indulgent to us and to give us more scope so that the junior politicians may develop well. Interpellation hour is the period when

13th September 1958]

there is a battle of wits. It is time for us to elicit more information from the Government. Please be considerate to us by extending the question time.

Mr. SPEAKER : The hon. Member unnecessarily took a very long time to make no point (laughter) for this reason that generosity does not lie with the Speaker in this case. It lies with the hon. Members of the House. According to the Rules only one hour must be set apart for the questions. If the House wants to take more time, it is open to the hon. Members to say they will like to have more time set apart for questions. Then I have no objection to extend the question hour. But I should like to say that the power does not lie with the Speaker. Therefore the appeal should go to the House and not to the Speaker. In this case since the House has agreed to sit for ten more minutes, the question does not arise.

Sri D. S. AUTHIMOOLAM : ' On principles of natural justice ' கொஞ்சம் அதிக நேரம் கொடுத்தால் எல்லோருக்கும் கேள்வி கேட்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.

Mr. SPEAKER : முக்கியமான கேள்வியாக இருந்தால் ஆறு உப கேள்விகளை அனுமதிக்கிறேன். ஜில்லாவைப்பற்றிய விஷயமாக இருந்தால் இரண்டு உப கேள்விகளை அனுமதிக்கிறேன். முக்கியமில்லை என்றால் அடுத்த கேள்விக்குப் போகிறேன்.

Sri P. S. K. LAKSHIPATHI RAJ : கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு வேண்டுகோள். கேள்வி நேரத்தை சற்று அதிகப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய சந்தேகங்களுக்கு எல்லாம் அரசாங்கத்தினிடம் விளக்கம் கேட்டுத் தெரிந்துகொள்வதற்கு இதுதான் ஏற்ற சந்தர்ப்பமாகையால், கேள்வி நேரத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Mr. SPEAKER : கேள்வி நேரத்தை அதிகப்படுத்துவது அங்கத்தினர்கள் கையில் தானிருக்கிறது. The hon. Member forgets that he has not given any question but if some hon. Member gives the question, he wants to put supplementary questions on it. Even in the Parliament only the Member who gives notice of the question has priority in asking supplementary questions but not the member who does not take care to give notice of any questions.

Magnesite.

* 228-B *Q.*—Sri T. S. RAMASWAMY PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the application for transfer of the leasehold rights for Magnesite in certain areas in Omalur and Salem taluks of Madras State to Messrs. Burn and Co., Ltd., of Calcutta, by Messrs. Magnesite Syndicate, Limited, was rejected by the Government;

(*b*) if so, the reasons therefor and the date of rejection;

(*c*) Whether any appeal against the rejection was preferred by the said concern before the Central Government;